<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,</u>

<u>ஜெயங்கொண்டம்.</u>

<u>CC.No. 144/2018</u>

2026ம்ஆண்டு மே மாதம் 14ஆம் நாள் வியாழக்கிழமைஅரசு தரப்பு சாட்சி– 03, திரு.ரமேஷ் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கோவிந்தராஜ், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ரமேஷ் | வயது | : | 37/26 |
| த.பெ/ க.பெ. | : | நடராஜன் | தொழில் | : | வங்கி பணியாளர் |
| ஊர் | : | தேவாமங்கலம் | நிலை | : | LW 05 / PW03 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

( எதிரி ஆஜரில்லை. அவர் தரப்பு வழக்கறிஞரால் மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது)

<u>முதல் விசாரணை:</u>

நான் தேவாமங்கலத்தில் வசித்து, வங்கியில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.12.2017ம் தேதியன்று மாலை 06.45 மணிக்கு மேல், ராஜேஷ்குமார் போன் செய்து, கழுவந்தோண்டிக்கும் உத்திரக்குடிக்கும் இடையேயுள்ள

வன்னியர் நகர் பஸ் ஸ்டாப்பிற்கு அருகில், எனது சித்தப்பா மகள் ஐஸ்வர்யாவும், ராஜேஸ்ம் இருசக்கர வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றுக்கொண்டிந்தபோது, அவர்களுக்கு எதிர் திசையில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த Honda Shine இருசக்கர வாகனம் மோதி, விபத்து ஏற்பட்டதாகவும், அதில் ஐஸ்வர்யாவிற்கு காலில் அடிபட்டு, நடக்க முடியாமல் உள்ளார் என்றும், தனக்கு இடுப்பில் அடிபட்டு, வலியிருப்பதாகவும் ராஜேஷ் எனக்கு போன் மூலம் சொன்னார். நான் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று ஐஸ்வர்யாவை அழைத்துக்கொண்டு கும்பகோணம் MM Ortho மருத்துவமனைக்கு சென்றேன். சம்பவ இடத்தில் நான் பார்த்தபோது, ஒருவர் அடிபட்டு மயக்க நிலையில் கிடந்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு போன் மூலம்தான் தெரியும் என்றால் சரிதான். சம்பவத்தின்போது மாட்டு வண்டி தாறுமாறாக சாலையில் சென்றது என்றாலும் அந்த மாட்டு வண்டியில் எதிரி ஓட்டி வந்த இருசக்கர வாகனம் மோதி பின்னர் புகார்தாரரின் வாகனத்தின்மீது மோதியதால்தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் எதிரியின் அதிவேகத்தினாலும், கவனக்குறைவாலும் இந்த விபத்து ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல.

/ உண்மை நகல்/

ஒம்/−P.கனிமொழி,

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்1,

ஜெயங்கொண்டம்.